**<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக்,M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.2/2025 இன் அசல் வழக்கு எண்.24/2025</u>**

1. செல்வம்
2. சுப்ரமணி
3. சின்னதம்பி

... மனுதாரர்/
உத்தேசதரப்பினர்கள்

/எதிராக/

1. மோகன்ராஜ்

... எதிர்மனுதாரர்/வாதி

2. வைரமணி
3. நாகராஜன்
4. சுரேஷ்

... எதிர்மனுதாரர்கள்/
வாதிகள்

இம்மனு இறுதியாக என் முன்பு கடந்த 06.11.2025 -ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L. சந்திரமோகன் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ஜெயராஜ் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களை 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளிக்க கோரி உ.வி.மு.ச கட்டளை 1 விதி 10(2) மற்றும் 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்களின் மனுசுருக்கம்</u>**

(2.1)மனுதாரர்கள் உத்தேச தரப்பினர்கள் ஆவார்கள். வாதியும், பிரதிவாதிகளும் கூட்டு சதி செய்துகொண்டு இறந்து போன அய்யாவுவின் வாரிசுகளாகிய மனுதாரர்களை அவசிய தரப்பினர்களாக சேர்க்காமல் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி மோசடியாக நீதி நெறிமுறை தவறி தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தகப்பனாரும் 1-ம் பிரதிவாதியின் கணவருமாகிய கணேசனுக்கு பாத்தியப்பட்டது என தாவாவில் சொல்லியிருப்பது முற்றிலும் பொய்யும் மோசடியும் ஆகும். உண்மையில் தாவா சொத்துக்கள் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், கலிங்கமுடையான்பட்டி கிராமத்தை சேர்ந்த சஞ்சீவிரெட்டி குமாரர் அய்யாவு என்பவருக்கு 21.03.1985 ஆம் தேதியில் ஆவண எண்.864/1985 படி பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் ஆகும். மேற்படி அய்யாவுக்கு மூக்காயி என்ற மனைவியும், மகன்களாகிய இந்த மனுதாரர் செல்வம், சுப்பிரமணி, பெரியசாமி, மற்றும் கணேசன் ஆகியோர்களும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். மேற்படி அய்யாவுவின் வாரிசுகளில் பெரியசாமியும், கணேசன் என்பவரும் அய்யாவு இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள். இறந்து போன கணேசனின் வாரிசுகள் தான் இந்த உபயவாதிகள் ஆவார்கள். அதேபோல் இறந்துபோன பெரியசாமியின் வாரிசுகள் குஞ்சம்மாள் வசந்தா, சித்ரா மற்றும் செந்தில் ஆகியோர்கள் வாரிசுகளாக உள்ளார்கள்.

(2.2)இந்நிலையில் மேற்படி அய்யாவு என்பவரும் கடந்த 10.08.1990 ஆம் தேதியில் மேற்படி அனைவரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித ஆதரவுகளும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். ஏற்கனவே தாவா சொத்தில் உபயவாதிகள் மனுதாரர்களுக்கு தெரியாமல் இறந்து போன கணேசன் பெயரில் மட்டும் பட்டாவினை ஏற்படுத்திக் கொண்டு தாவா சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என வீண் தகராறு செய்து வந்தார்கள். உபயவாதிகளும் மனுதாரர்களை தாக்கி சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதில் காவல்துறையில் உபயவாதிகளின் குடும்பத்தார்கள் மோகன்ராஜ் சுரேஷ் ஆகியோர்கள் பெயரில் குற்ற எண்.203/2024 நம்பரில் வழக்கு பதிவு செய்து விசாரணையும் நிலுவையில் உள்ளது. அதேபோல் இந்த மனுதாரர் பெயரிலும் உபயவாதிகள் தரப்பினர் கொடுத்த பொய்யான புகாரின் பேரில் குற்ற எண்.202/2024 நம்பரில் மனுதாரர் மற்றும் அவரது மனைவி மகன் பெயரில் பதிவு செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. உபயவாதிகள் எப்படியாவது அய்யாவுவின் மற்ற வாரிசுகள் ஆகிய மனுதாரர்களுக்குள்ள பங்குபாத்தியத்தை சட்டவிரோதமாக அபகரிக்க முற்படுவதோடு நீதி நெறிமுறைகளை தவறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

(2.3)மனுதாரர்களும் வருவாய் துறையில் அய்யாவு வாரிசுகளான மனுதாரர்களையும் வருவாய்த்துறை கணக்குகளில் சேர்க்க மனு கொடுத்தும் அந்த அடிப்படையில் வருவாய்த்துறையினரும் விசாரணை செய்து மூல கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்து தாவா சொத்திற்கு மனுதாரர்கள் பெயரையும் சேர்த்து கூட்டு பட்டாவும் வழங்கியுள்ளார்கள். தாவா சொத்துக்களில் அய்யாவுவின் வாரிசுகளாகிய உபயவாதிகளுக்கும், மனுதாரர்களுக்கும் சேர்த்து பங்கு பாத்தியம் உள்ளது. அந்த வகையில் உபயவாதிகளின் குடும்பத்தாருக்கு 1/6 பங்கு, இறந்துபோன பெரியசாமியின் வாரிசுகளுக்கு 1/6 பங்கும், இறந்து போன அய்யாவு மனைவி மூக்காயிக்கு 1/6 பங்கும் மற்றும் மனுதாரர்களுக்கு தலா 1/6 பங்கு வீதம் 3/6 பங்கு பாத்தியமும் தாவா சொத்துக்களில் சித்தரித்துள்ளது. அதனால் மனுதாரர்களையும் இந்த வழக்கில் அய்யாவுவின் வாரிசுதாரர் என்ற அடிப்படையில் அவசிய தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களும் அவர்களது பங்கு பாத்தியத்தை கோரி எதிர்பாத்திய உரை தாக்கல் செய்வதற்கு அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தையும் செலுத்த தயாராக உள்ளார்கள். எனவே மனுதாரர்களை தரப்பினராக சேர்ப்பதால் உபயவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. இந்த வழக்கில் மனுதாரர்களை அவசிய தரப்பினராக சேர்த்தால் வழக்கில் ஒரு திண்ணமான முடிவு ஏற்பட்டு தீர்ப்பு செய்வதற்கு ஏதுவாக இருக்கும் இல்லாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

**<u>1-ம் எதிர்மனுதாரர்/வாதியின் பதிலுரை சுருக்கம்:-</u>**

(3.1)இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனு சங்கதிகள் உண்மையல்ல. மோசடியானது. சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கை இந்த எதிர்மனுதாரர் கணேசன் அவரது வாழ்நாளில் அனுபவித்து வந்த சொத்துக்களில் பாகம் கோரி வாதி அவரது தாய் மற்றும் உடன் பிறந்தவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு பிரதிவாதிகள் இவ்வழக்கு நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் நோக்கத்தில் தாவா சொத்தில் வாதிக்கு சேர வேண்டிய பாகத்தை தராமல் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரர்களை தூண்டிவிட்டு மனுவை தாக்கல் செய்திருப்பதாக தெரியவருகிறது. வாதியின் தந்தை கணேசன் 23.07.2023 அன்று இறந்துவிட்டார். அதற்கு ஆதரவாக அவரது இறப்பு சான்றிதழும், வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சங்கதிக்கு விரோதமாக மனு அபிடவிட்டில் நாளாவது பாராவில் அய்யாவுக்கு முன்பாக கணேசன் இறந்துவிட்டதாக கூறியுள்ளனர்.

(3.2)உண்மையில் தாவா சொத்து பற்றி இந்த மனுவில் சொல்லியபடி அய்யாவுக்கு சொந்தமானது என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்கின்றவரை இம்மனுதாரர்கள் பாகம் கோரி யாதொரு வழக்கும் தாக்கல் செய்யாமல் அமைதி காத்து வந்தது ஏன் என்றும், இந்த மனுதாரர் அபிடவிட் பாரா 5-ல் சொல்லியபடி 2024

இல் குற்ற வழக்கு பதிவான பிறகு மனுதாரர்கள் ஏன் சிவில் நீதிமன்றத்தை உடனடியாக அணுகாமல் அமைதியாக இருந்தனர், என்பதற்கு காரணங்களை கூறவில்லை. இதிலிருந்து மனுதாரர்களின் மோசடி எண்ணத்தை நீதிமன்றம் தெரிந்து கொள்ளலாம். மனு காரணங்கள் உண்மையாக இருந்தால் அய்யாவுவின் ஒரு வாரிசான பெரியசாமியின் சட்ட வாரிசுகளை இம்மனுவில் மனுதாரர்களாக சேர்த்து மனுவை தாக்கல் செய்யாமல் இருப்பதிலிருந்து இந்த மனு நடவடிக்கை உண்மையான நோக்கம் கொண்டதல்ல, நீதிநெறிக்கு அப்பாற்பட்டது என்று அறிந்து கொள்ள முடியும். தாவா சொத்து உபயவாதிகளின் தந்தை கணேசனுக்கு பாத்தியப்பட்டது. அவர் அதனை தனது ஆயுள் காலம் வரை நிராட்சேபனையாக யாவரும் அறிய அனுபவித்து வந்தார். அவரது ஆயுள் காலத்திற்கு பின்பு இந்த உபயவாதிகளுக்கு சட்டபடி சேர வேண்டிய பாக விகிதாச்சாரப்படி கிடைக்கத்தக்கது. தாவா சொத்தில் மனுதாரர்கள் பாகம் கோர முடியாது. தாவா வழக்கு நடவடிக்கையை தாமதப்படுத்தும். இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல. இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையல்ல. மனுதாரருக்கு யாதொரு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

__தீர்வு..__

(5.1)இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதார்/உத்தேச தரப்பினர்கள் தாவா சொத்தில் தங்களுக்கும் பங்கு உள்ளதாகவும், உபயவாதிகளின் முன்னோரான அய்யாவுக்கு மூக்காயி என்ற மனைவியும், செல்வம், சுப்பிரமணி, பெரியசாமி, மற்றும் கணேசன் ஆகிய மகன்களும் சட்டப்படியான வாரிசுகள் என்றும், மேற்படி அய்யாவுவின் வாரிசுகளில் பெரியசாமியும், கணேசன் என்பவரும் அய்யாவு இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றும், இறந்து போன கணேசனின் வாரிசுகள் தான் இந்த உபயவாதிகள் என்றும், இறந்துபோன பெரியசாமியின் வாரிசுகள் குஞ்சம்மாள் வசந்தா, சித்ரா மற்றும் செந்தில் ஆகியோர்கள் உள்ளதாகவும், அவர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தங்களையும் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. அதில் கணேசன் இறந்த தேதி தவறாக உள்ளதாகவும், இந்த எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே ஏன் இந்த மனுதாரர்கள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று காரணம் தெரிவிக்கவில்லை என்றும், அய்யாவுவின் மற்றொரு வாரிசான பெரியசாமியின் சட்ட வாரிசுகளை இம்மனுவில் மனுதாரர்களாக சேர்க்காமல் மனு தாக்கல் செய்துள்ளதிலிருந்து இம்மனு நேர்மையான நோக்கத்துடன் தாக்கல் செய்யவில்லை என்பது நன்கு விளங்கும் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்ய

வேண்டும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. 2, 3,4 எதிர்மனுதாரர்கள் இம்மனுவை பொறுத்து எதிருரை தாக்கல் செய்யவில்லை.

(5.2)அசல் வழக்கை 1-ம் எதிர்மனுதாரர்/வாதி 03.03.2025-ம் தேதி வாதியின் தந்தை கணேசன் பெயரில் உள்ள பட்டா அடிப்படையில் பாகப்பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்கள் கடந்த 13.10.2025 அன்று தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர்கள் தாங்களும் அய்யாவுவின் வாரிசுகள் என்றும், வாதியின் தந்தை கணேசனின் உடன்பிறந்தவர்கள் தங்களுக்கும் தாவா சொத்தில் பாகம் உள்ளது எனவும், தங்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்றும், மனு தாக்கல் செய்துள்ளனர். இம்மனுவுடன் உத்தேச தரப்பினர்கள் 21.03.1985 தேதியிட்ட அய்யாவு பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்று நகலையும் அய்யாவு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களையும் 1 முதல் 3 தாவா சொத்துக்களுக்குண்டான உபயதரப்பினர்கள் அய்யாவு மற்றும் கணேசன் வாரிசுகள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர்/வாதி தரப்பினர்களின் உறவுமுறையை மறுக்கவில்லை. வழக்கானது ஆரம்ப நிலையில் உள்ளது. மனு, எதிருரை சங்கதிகளை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் அய்யாவுவின் நேரடி வாரிசுகள் ஆவார்கள். ஆனால் தாவா சொத்தில் மனுதாரர்களுக்கு பாகம் உள்ளதா, இல்லையா என்பது குறித்து வழக்கின் இருதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதம் கேட்கப்பட்ட பின்னர் இறுதி தீர்ப்பின்போது தான் முடிவு செய்ய முடியும். எனவே, தற்போது மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதால் வழக்கிற்கோ, அல்லது வாதிக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

(5.3)அசல் வழக்கில் முறையான பாக உரிமை உள்ள அனைத்து தரப்பினர்களையும் சேர்த்து பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பிறப்பிக்கப்படும் தீர்ப்பே முறையானதாக இருக்கும். இல்லாவிடில் புதிய வழக்கு தோற்றுவிக்க வழிவகுக்கும். மேலும் அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் இருந்தால் அசல் வழக்கு பகுதி பாகப்பிரிவினையாலும், அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும் பாதிப்படைய வாய்ப்புள்ளது. வாதி இம்மனுவை அனுமதிக்க கடுமையாக ஆட்சேபனை செய்து பதிலுரை தாக்கல் செய்துள்ளார். பதிலுரை சங்கதிகள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர் சாட்சிய விசாரணையின்போது மனுதாரர்களை குறுக்கு விசாரணை செய்தும், எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்கள் மூலமும், வாதத்தின்போதும் பாக உரிமை குறித்து நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்கலாம். எனவே, அய்யாவுவின் முறையான வாரிசுகளான இந்த மனுதாரர்கள் மற்றும் பெரியசாமியின் வாரிசுகள் குஞ்சம்மாள்

வசந்தா, சித்ரா மற்றும் செந்தில் ஆகியோர்களையும் தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிடப்படுகிறது. 1-ம் எதிர்மனுதாரர்/வாதி அய்யாவுவின் அனைத்து வாரிசுகளையும் சேர்த்து திருத்தப்பட்ட வழக்குரை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. 1-ம் எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கில் அய்யாவுவின் அனைத்து சட்டப்படியான வாரிசுகளையும் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(Sd)/- C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.</u>** இல்லை.

(Sd)/- C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.